117—

நவீன தங்கும் விடுதி

***1166—திரு. செல்லூர் கே. ராஜூ:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நவீன தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'பிர்லா விஷ்ரம்' என்ற பெயரில், 24 அறைகள் கொண்ட, 107 படுக்கை வசதிகளுடன் ஒரு தங்கும் விடுதி, திருக்கோயிலின் மேற்கு கோபுர நுழைவு வாயிலின் அருகில் தற்போது நல்ல நிலையில் செயல்பட்டு வருகின்றது. பக்தர்கள் தங்குவதற்குண்டான அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைந்த ஒரு கட்டடமாக அது இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.*

திரு. கோ. தளபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 14 ஆம் தேதியன்று, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம், துறையின் சார்பாக சிறப்பாக நடைபெற்றது. துறையினுடைய அலுவலர்கள் மேற்பார்வையில், எந்தவிதமான அசம்பாவிதங்களும் ஏற்படாமல், மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணத்தை பொதுமக்கள் நன்றாகப் பார்த்தார்கள். மேலும், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம், ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் வட மாநிலங்களிலிருந்தும், தமிழகத்திலிருந்து ஏழை, எளிய மக்களும் வருகின்றார்கள். பிர்லா விஷ்ரம் விடுதியில் அவர்களெல்லாம் தங்குவதற்கு இடம்*

2022 ஏப்ரல் 18]

பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாக, நவீன வசதி கொண்ட ஒரு கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நடைபெற்ற துறையினுடைய மானியக் கோரிக்கையில், எல்லீஸ் நகரப் பகுதியில், சுமார் 1.33 ஏக்கர் நிலப்பரப்பளவில், 57 அறைகளுடன், 307 படுக்கை வசதிகளுடன் 35 கோடி ரூபாய் செலவில் தங்கும் விடுதியைக் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், தற்போது, திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளியின் இறுதி நாளாக, வருகின்ற 19-5-2022 அன்று முடிவு செய்யப்பட இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டுக்குள்ளாக இந்தப் பணிகளை மேற்கொண்டு, ஒரு நாளைக்கு 307 பக்தர்கள் தங்குகின்ற அளவுக்கு படுக்கை வசதிகளுடன் உணவகம் மற்றும் வருகின்ற பக்தர்களுக்கு வேண்டிய* Wi-Fi *போன்ற* internet *வசதி, தொலைக்காட்சிப்பெட்டி போன்ற அனைத்து வசதிகளுடன்கூடிய பக்தர்கள் தங்கும் விடுதி, 35 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தில் அமைந்திருக்கக்கூடிய இராமநாதசுவாமி திருக்கோயிலுக்கு, குறிப்பாக, அமாவாசை தினத்தன்று வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் பக்தர்கள் அதிகமாக வருகின்றார்கள். வரக்கூடிய பக்தர்கள் இராமேஸ்வரத்தில் இருக்கக்கூடிய அக்னி தீர்த்தக் கடலிலே நீராடி, புனிதத் தலமாக இருக்கக்கூடிய 22 தீர்த்தங்களில் நீராடி, சுவாமி தரிசனத்திற்காகச் செல்கின்றார்கள். அமாவாசை தினத்தன்று, அங்கு பக்தர்கள் அதிகமாக வரக்கூடிய காரணத்தினால், துறையினுடைய சார்பாக, அனைத்து வசதிகளுடன்கூடிய பக்தர்கள் தங்கும் விடுதி ஒன்று கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 2014–2015 ஆம் ஆண்டு இதே சட்டமன்றத்தில் ரூ.22 கோடி செலவில் பக்தர்கள் தங்கும் விடுதிக்காக விதி 110–ன்கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டது. குறுகிய காலத்தில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படாததால், பின்னர் ரூ.30 கோடி அளவிற்கு ஒப்பந்தம் கோரப்பட்டு, பணிகள் நிறைவுற்று, 26–4–2020 அன்று அதற்கு திறப்பு விழா செய்யப்பட்டது. நானும், துறையினுடைய செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்களோடு சென்று அந்தப் பகுதியில் ஆய்வினை மேற்கொண்டோம். பணிகள் முழுமை பெறாமலேயே 30 கோடி ரூபாய் அளவிற்கு ஒப்பந்ததாரருக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கின்றது. அந்தக் கட்டடத்தின் உறுதித்தன்மை தேவையான அளவிற்கு இல்லாததால், சுமார் 2 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் படுக்கை விரிப்புகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், உணவகங்கள்,* internet *வசதி, பூங்கா போன்ற பல்வேறு வசதிகளை அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அனுமதியோடு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கின்றது. இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கு 136 படுக்கை வசதிகளுடன்கூடிய 54 அறைகள் கொண்ட தங்கும் விடுதியாக அது வெகுவிரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அரசினுடைய master Plan *என்று சொல்லப்படுகின்ற வரைவு திட்டத்தை 5 திருக்கோயில்களுக்கு தயாரித்தோம். அந்த வகையிலே, இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு அமாவாசை தினத்தன்று வருகின்ற அதிகப்படியான பக்தர்களின் எண்ணிக்கைக்கேற்ப அவர்கள் நேர்த்திக்கடனைச் செலுத்துவதற்கும், பித்ருதோஷம் கழிப்பதற்குமான வசதிகள் செய்வதற்கு ரூ.50 கோடி செலவிலே ஒரு வரைவுத் திட்டத்திற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் யாரும் கேட்காத நிலையிலே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே அறிவிப்பு செய்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குண்டான வரைவுத் திட்டம் தயாராக*

2022 ஏப்ரல் 18]

இருக்கின்றது. கூடிய விரைவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் PPT-ஐ பார்வையிட்ட பிறகு, அதற்குண்டான பணிகளுக்கு DPR தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அடுத்த ஆண்டு இந்தப் பணியை மேற்கொள்ள இந்து சமய அறநிலையத் துறை உத்தேசித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி, தேக்கம்பட்டி கிராமத்தில் பிரசித்திபெற்ற வன பத்ரகாளியம்மன் கோயில் இருக்கிறது. அங்கே ராஜகோபுரம் கட்டும் பணி தொடங்கப்பட்டு, பாதியிலே நின்றிருக்கிறது. ஏற்கெனவே, அந்தக் கோயிலில் சுற்றுப் பிரகார மண்டபம், பக்தர்கள் உணவருந்துவதற்கான மண்டபம், முடி காணிக்கை மண்டபம் மற்றும் ஆற்றங்கரையிலே ஆண்கள் மற்றும் பெண்கள் உடை மாற்றும் அறைகள் ஆகியவை 25 கோடி ரூபாய் செலவிலே கட்டுவதற்காக அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தப் பணிகளை மேற்கொள்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற வன பத்ரகாளியம்மன் திருக்கோயில் பரம்பரை அறங்காவலர் சாந்தி என்ற நபரிடம் இருக்கின்றது. இந்தத் திருக்கோயிலுக்கு ஏற்கெனவே முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் 2010 ஆம் ஆண்டு ஒரு வரைவுத் திட்டத்தைத் தயாரித்து, மொத்தம் 16 பணிகளுக்கு உத்தரவிட்டு, அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 4 பணிகள் நிறைவடைந்துள்ளதை அறிந்து நானும், துறையினுடைய செயலாளர் மற்றும் ஆணையர்*

திரு. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களும் நேரடியாகச் சென்று, கள ஆய்வு செய்தோம். அறங்காவலர் குழுவினுடைய பரம்பரை அறங்காவலரை அழைத்து, இப்படிப் பணிகளை தாமதப்படுத்துவது முறையல்ல என்று அவரை எச்சரித்து, சட்டப்பூர்வமாக ஒரு notice-ஐயும் அளித்தோம். தற்போது வன பத்ரகாளியம்மன் கோயிலில் சுமார் 8 ஆண்டுகளாக திறக்கப்படாமல் இருந்த 3-வது வாயில் கதவைத் திறந்த பெருமை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலே இந்து சமய அறநிலையத் துறையைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது அந்தப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு, பெருந்திரளான பக்தர்கள் தரிசனத்தை ஏற்கும் வகையில், பல்வேறு திட்டங்களை உருவாக்கி, master plan-திட்டத்தின்கீழ் கொண்டுவந்து, இன்னும் 2 ஆண்டு காலத்திற்குள் அந்தப் பணிகள் முழுவதுமாக நிறைவடைய இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கோயில்களைப் பற்றி இந்த மன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில், காஞ்சிபுரம்தான் ஒட்டுமொத்த கோயில்களின் நகரமாக இருக்கின்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்களைக் கொண்டிருக்கக்கூடிய காஞ்சி மாநகரத்தில், வெளியூர்களிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வந்து செல்லக்கூடிய வகையிலே, பக்தர்கள் தங்குவதற்கு ஏதுவாக, தங்கும் விடுதி அங்கே அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையினை நீண்ட நெடிய காலமாக நாங்கள் வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்தவகையில், கட்டப்பட்டிருக்கக்கூடிய Yathri Niwas என்று சொல்லக்கூடிய பயணியர் தங்கும் விடுதியில் பெருமளவில் பக்தர்கள் தங்குவதற்கான வசதியை ஏற்படுத்தித் தருவதற்கும், அதனை ஒட்டியிருக்கக்கூடிய பகுதியில் parking space-வாகனங்களை நிறுத்துவதற்கும் இடம் இருக்கிறது. எனவே அதையும் பயன்படுத்துவதன் மூலமாக போக்குவரத்து நெருக்கடி ஏற்படாத நிலை உருவாகும், அதேபோல, சுற்றுப்பயணத்திற்கு வரக்கூடிய பயணிகள் பயன்பெறக்கூடிய வகையில், Tourist Guide என்று சொல்லக்கூடிய வழிகாட்டிகளையும்

2022 ஏப்ரல் 18]

நியமித்து அதன்மூலமாக கோயில்களைச் சுற்றிப்பார்ப்பதற்கும், அங்கே தங்குவதற்கு ஏதுவாக தங்கும் விடுதியையும் ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில், சுமார் 89 ஆயிரம் சதுரஅடி நிலப்பரப்பில் 54 அறைகள் கொண்ட, 104 படுக்கை வசதிகள் கொண்ட, ஒரு பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கு 2017 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டபடி ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியோடு பணி துவங்கப்பட்டது. 25 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட அந்தக் கட்டடம் 26–2–2021 அன்று திறந்து வைக்கப்பட்டது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்களும், அந்த மாவட்டத்தினுடைய செயலாளர் திரு. சுந்தரம் அவர்களும், மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, நானும், துறையின் செயலாளர், ஆணையாளர் ஆகியோரும் அந்தக் கட்டடத்தினை முழுமையாக ஆய்வு செய்தோம். அந்தக் கட்டடத்திற்குண்டான கட்டுமான ஒப்பந்தத்திற்குத் தேவையான அனைத்து நிதியையும் ஏற்கெனவே வழங்கிவிட்டார்கள். ஆனால், கழிவு நீர், குடிநீர் இணைப்புகூட இன்னும் அந்த விடுதிக் கட்டடங்களுக்கு வழங்கப்படவில்லை. ஆசிய வளர்ச்சி வங்கி அளித்த பணம் முழுவதுமாக ஒப்பந்ததாரருக்குத் தரப்பட்டுவிட்டதால் மீதமுள்ளப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இப்போது 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், அங்கே பூங்காக்கள் அமைப்பது, வருகின்ற வாகனங்களுக்கு* parking *வசதி ஏற்படுத்தித்தருவது போன்ற அனைத்துப் பணிகளுக்கும் திட்டமிட்டிருக்கிறோம். பணி முழுமையடையாமல், பணம் பெற்று சென்ற அந்த ஒப்பந்ததாரர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பணி முடிவடைந்த பிறகு, சுற்றுலா வளர்ச்சித் துறையின் மூலமாக பக்தர்கள் தங்கும் விடுதியைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதா அல்லது இந்து*

சமய அறநிலையத் துறையே அதைப் பயன்படுத்திக்கொள்வதா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று முடிவெடுக்கப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் பக்தர்கள் தங்கும் விடுதி, பக்தர்கள் பயன்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.R.R. ரகுராமன் அவர்கள்.

திரு. A.R.R. ரகுராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் தொகுதியில் உள்ள சாத்தூர் பெருமாள் கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்து கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. அங்குள்ள மக்கள் அரசாங்கத்துடன் இணைந்து இந்த வேலையை செய்யத் தயாராக உள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோயில் கும்பாபிஷேகம் செய்வதற்குப் பரிந்துரை செய்வார்களா என்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் ஆய்வின்போது, எங்களுக்கு, அவர் எடுத்துக்கூறிய ஆலோசனை என்னவென்றால், ஆகம விதிப்படி 12 ஆண்டுகள் முடிவடைந்த அந்தத் திருக்கோயில்களுடைய திருப்பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோல் ஏற்கெனவே துவங்கப்பட்ட திருப்பணிகள் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் நிலுவையில் உள்ள திருக்கோயில்களின் பட்டியலை எடுத்து நேரடியாக கள ஆய்விற்குச் சென்று அந்தப் பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார். நிதிநிலை அறிக்கையில்கூட 100 கோடி ரூபாய் அளவில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில்களைப் புனரமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கின்ற சாத்தூரில் இருக்கின்ற பெருமாள் கோயில் திருப்பணிகளுக்கு இந்த ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையிலே நிச்சயம், நிதி ஒதுக்கப்பட்டு, ஓராண்டிற்குள் குடமுழுக்கு நடைபெறும் என்பதை

2022 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள்.*

திரு. எஸ். காந்திராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய நம்முடைய அரசு, இந்து சமய அறநிலையத் துறைக்கு, குறிப்பாக இறைவனுக்கு பெரிய நிவாரணம் கொடுக்கின்ற ஓர் ஆட்சியாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருந்த நிலங்களையெல்லாம் மீட்கின்ற ஓர் அரசு என்ற ஒரு நற்பெயரை வாங்கிக்கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு வாருங்கள். என்ன வேண்டும் என்று சொல்லுங்கள்.*

திரு. எஸ். காந்திராஜன்: *சுருக்கமாகச் சொல்கிறேன். இதைப் பொறுத்த அளவில் இன்றைக்கு இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் வருகின்ற கோயில்களில் இருக்கின்ற விடுதிகளைப் பார்த்தால்* maintenance *மிகவும் மோசமாக இருக்கின்றது. அதாவது உள்ளே போனால். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நாம் அந்த விடுதிகளை* maintenance *செய்ய வேண்டும் அவ்வளவுதானே.*

திரு. எஸ். காந்திராஜன்: Maintenance *செய்ய வேண்டும். அதில் வந்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒட்டுமொத்தமாக.*

திரு. எஸ். காந்திராஜன்: *குறிப்பாக, ஒட்டுமொத்தமாக அதை தனியாருக்கு விட்டு . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தமிழகத்தில் சிறிய, பெரிய*

விடுதிகள் என்று கணக்கெடுத்தால், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 56 விடுதிகள் இருக்கின்றன. அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்குவதற்கு, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, அந்த விடுதிகளில் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஆண்டுகூட ரூ.10 கோடி மதிப்பீட்டில் திருத்தணி போன்ற திருக்கோயில்களில் உள்ள பக்தர்கள் தங்கும் விடுதிகளில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. வருகின்ற காலங்களில் இந்த விடுதிகளை இந்து சமய அறநிலையத் துறையே தன்னுடைய பராமரிப்பில் வைத்துக்கொள்வதா அல்லது சுற்றுலா வளர்ச்சித் துறையிடம் ஒப்படைப்பதா அல்லது தனியாரிடம் இந்த விடுதிகளை ஒப்படைத்து சிறந்த முறையில் நிருவகிப்பதா என்ற கருத்துரு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அவர் எடுக்கின்ற முடிவின்படி தரமான வகையில் பக்தர்கள் தங்குகின்ற அளவிற்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய விடுதிகளாக உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. காந்திராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடம்

***14478—திரு. P.R.G. அருண்குமார்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, வெள்ளமடை ஊராட்சியில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*